எம்சி.எண்.4/2022 நாள்: 18.07.2023

ம.சா.3 வெள்ளியங்கிரி

**<u>மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்குவிசாரணை:</u>**

1. எதிர்மனுதாரர் என் மகன் என்றால் சரிதான். எனது மகன் என்ன வேலைக்கு செல்கிறார் என்றால் கட்டிடத்தில் கம்பி கட்டும் தொழில் செய்கிறார். மனுதாரர் எதிர்மனுதாரரை எவ்வளவு நாள் பிரிந்து வாழ்கிறார் என்றால் 4வருடம் , 8 மாத காலமாக பிரிந்து வாழ்ந்து வருகிறார். எனது மகன் ஒரு நாளைக்கு அவர் பார்க்கும் வேலைக்கு எவ்வளவு பணம் கூலியாக கிடைக்கும் என்றால் ரூ.1200/- ஒரு நாளைக்கு கிடைக்கும். அன்றாடம் வேலை செய்து அவர் பெறும் பணத்தை எதிர்மனுதாரர் என்னிடம் தான் கொடுப்பார் என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பல்வேறு பெண்களுடன் எதிர்மனுதாரர் தொடர்பு வைத்துள்ளார் என்றும் அது சம்மந்தமாக 1ம் மனுதாரர் புகார் ஏதும் எதிர்மனுதாரர் மீது கொடுத்து நிலுவையில் உள்ளதா என்று சொன்னால் அவ்வாறு ஏதும் இல்லை. ஆனால் எதிர்மனுதாரரின் செயலை 1ம் மனுதாரர் தட்டிக்கேட்டதால் தான் 1ம் மனுதாரரை அடித்து அனுப்பி விட்டார்.

2. எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரை அடித்து மிதிக்கும் போது அப்போது கூட இருந்தேனா என்றால் நான் உடன் இருந்தேன். நான் அதை தட்டிக்கேட்டேன். மேலும் அப்போது எதிர்மனுதாரர் என்னிடம் நானாக தான் காதல் திருமணம் 1ம் மனுதாரரை செய்தேன் நீ எந்த பெண்ணையும் பார்த்து திருமணம் செய்து வைக்கவில்லை எனவே நீ அதில் தலையிட கூடாது என்றார். கடந்த 15.11.2018ம் தேதி என்னுடைய கட்டாயத்தின் பேரில் தான் விவாகரத்து பத்திரம் தயார் செய்யப்பட்டது என்றும் அதில் எதிர்மனுதாரரை கட்டாயபடுத்தி கையெழுத்து செய்ய வைத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

3. நான் கட்டாயப்படுத்தி எதிர்மனுதாரரை கையெழுத்து விவாகரத்து பத்திரத்தில் செய்ய வைத்ததால் அதை மீறி எதிர்மனுதாரர் கோயம்புத்தூர் மாண்புமிகு முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் ஹெச்எம்ஓபி.எண்.223/2022 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரரின் குழந்தைகள் இருவரும் அரசு பள்ளியில் தான் படிக்கிறார்கள் என்றால் சரிதான். நான் மனுதாரருடன் தவறான முறையில் உடலுறவு வைத்திருந்ததை எதிர்மனுதாரர்

தட்டிக்கேட்டதால் தான் எனக்கும் எதிர்மனுதாருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றும் அதை காரணமாக கொண்டு தான் நான் நிரூபண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் என்னை அருவாளால் வெட்ட வந்ததாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது பேத்திகளை பார்ப்பதற்காக தேவகோட்டைக்கு வந்துவிட்டு எதிர்மனுதாரர் நாங்களே ஆகாது என ஒதுக்கிவிடும் போது நீ எதுக்கு போய் பார்த்துவருகிறாய் என்று கடந்த 24.07.2022ம் தேதி என்னை அருவாளால் தலை, இடுப்பு மற்றும் காலில் வெட்டினார்.

4. நான் எதிர்மனுதாரர் என்னை வெட்டியது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் சூளூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் மனுவின் மனு ரசீது எண் நியாபகம் உள்ளதா என்றால் என்னை உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். போலீசார் மனு ரசீது கொடுக்கவில்லை. கோயம்புத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் விசாரித்தார்கள். எனது விருப்பமின்றி எதிர்மனுதாரர் மனுதாரரை காதல் திருமணம் செய்து கொண்டதால் உண்மைக்கு புறம்பான விசயங்களை சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை அடித்துவிரட்டி விட்டு என்னுடைய வீட்டில் தான் குடியிருந்து வருகிறார். மனுதாரரும், எதிர்மனுதாரரும் 4 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வந்த காலத்தில் எதிர்மனுதாரர் மனுதாரர் மற்றும் குழந்தைகளை பார்க்க வந்தது பணம் உதவி கொடுத்த விசயத்தை என்னிடம் சொன்னாரா என்றால் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. கோயம்புத்தூர் மாவட்டத்தில் எனக்கு பாத்தியப்பட்ட ஒரு வீட்டில் நானும் மற்றொரு வீட்டில் எனது மகனும் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்து வாழ விருப்படுகிறாா என்றும் நான் தான் சேர்ந்து வாழ இடையூறு செய்கிறேன் என்றும் நான் தான் கால நேரத்தை வீணடிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சொல்லியுள்ள விவரங்கள் உண்மைக்கு புறம்பானது என்று சொன்னால் சரியல்ல.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**

குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.